**இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனம் - 2021**

---

## 1. நிதிக்கூற்றுக்கள்

### 1.1 முனைப்பழியுள்ள அபிப்பிராயம்

இலங்கை ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக் கூற்று மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான விரிவான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொழிப்புக்கள் உள்ளடங்கிய நிதிக்கூற்றுக்களிற்கான குறிப்புக்கள் என்பவற்றை உள்ளடக்கிய 2021 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் 2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டம் மற்றும் 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டம் என்பவற்றின் ஏற்பாடுகளுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலைமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கு இணங்க எனது பணிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டன. பாராளுமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென நான் கருதுகின்ற எனது கருத்துரைகளும் அவதானிப்புக்களும் இந்த அறிக்கையில் காணப்படுகின்றன.

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களின் தாக்கத்தினைத் தவிர்த்து கூட்டுத்தாபனத்தின் 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமையினையும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதனது நிதிசார் செயலாற்றலினையும் காசுப்பாய்ச்சலினையும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க நிதிக்கூற்றுக்கள் உண்மையாகவும் நியாயமாகவும் தருகின்றன என்பது எனது அபிப்பிராயமாகும்.

### 1.2 முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை

இந்த அறிக்கையின் 1.5 ஆம் பந்தியில் விபரிக்கப்பட்ட விடயங்களை அடிப்படையாகக் கொண்டு எனது அபிப்பிராயம் முனைப்பழியுள்ளதாக்கப்படுகின்றது.

இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு (எஸ்எல்ஏயூஎஸ்எஸ்) இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். அந்நியமங்களின் கீழான எனது பொறுப்புக்கள் எனது அறிக்கையில் நிதிக்கூற்றுக்களின் கணக்காய்விற்கான கணக்காய்வாளரின் பொறுப்புக்கள் பந்தியில் மேலும் விபரிக்கப்படுகின்றன. எனது முனைப்பழியுள்ள அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

### 1.3 நிதிக்கூற்றுக்களிற்கான முகாமைத்துவத்தினதும் அவ் ஆளுகைக்கு உட்பட்ட தரப்பினர்களினதும் பொறுப்புக்கள்

நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களிற்கு இணங்க தயாரித்து சரியாகவும் நியாயமாகவும் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

நிதிக்கூற்றுக்களைத் தயாரிக்கும் போது, கூட்டுத்தாபனம் தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவொன்றாக தொடர்ந்து செயற்படுவதற்கான அதன் ஆற்றலினை மதிப்பீடு செய்தல், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவுடன் தொடர்புடைய விடயங்களை பொருத்தமானவாறு வெளிப்படுத்துதல் மற்றும் முகாமைத்துவமானது கூட்டுத்தாபனத்தை கலைப்பதற்கு கருதினால் அல்லது வேறு மாற்று வழி இல்லாவிட்டால் செயற்பாடுகளினை இடைநிறுத்த நடவடிக்கை எடுத்தால் தவிர தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு அடிப்படையினை பயன்படுத்துதல் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

கூட்டுத்தாபனத்தின் நிதி அறிக்கையிடல் செயன்முறையை மேற்பார்வை செய்தல் அவ் ஆளுகைக்குட்பட்ட தரப்பினர்களின் பொறுப்பாக உள்ளது.

2018 இன் 19 ஆம் இலக்க தேசிய கணக்காய்வு அதிகாரச்சட்டத்தின் 16(1) ஆம் பிரிவின் பிரகாரம் கூட்டுத்தாபனத்தின் வருடாந்த மற்றும் காலரீதியான நிதிக்கூற்றுக்களை தயாரிக்கக்கூடியவாறு கூட்டுத்தாபனம் அதன் அனைத்து வருமானங்கள், செலவினங்கள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்களின் புத்தகங்கள் மற்றும் பதிவேடுகளை முறையாக பேணுதல் வேண்டும்.

## 1.4 கணக்காய்வின் நோக்கெல்லை

மோசடி அல்லது தவறு காரணமாக ஏற்படக்கூடிய அனைத்துப் பொருண்மையான பிறழ் கூற்றுக்களிருந்தும் நிதிக்கூற்றுக்கள் விடுபட்டுள்ளனவா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதும் எனது அபிப்பிராயத்தை உள்ளடக்குகின்ற கணக்காய்வாளர் அறிக்கை ஒன்றை வழங்குவதும் எனது குறிக்கோள்களாக உள்ளன. நியாயமான உறுதிப்பாடென்பது உறுதிப்பாட்டின் உயர் நிலையொன்றாக காணப்படுகின்ற போதிலும் இலங்கை கணக்காய்வு நியமங்களிற்கு இணங்க மேற்கொள்ளப்படுகின்ற கணக்காய்வில் பொருண்மையான பிறழ்கூற்றொன்று காணப்படுகையில் அதனை எல்லா வேளையிலும் கண்டுபிடிக்கும் என்பதற்கு அது உத்தரவாதத்தினை வழங்குவதில்லை. பிறழ்கூற்றுக்களானவை மோசடி அல்லது தவறு காரணமாக எழக்கூடுமென்பதுடன் அவற்றுள் இந்த நிதிக்கூற்றுக்களை அடிப்படையாகக் கொண்டு பாவனையாளர்களால் மேற்கொள்ளப்படும் பொருளாதாரத் தீர்மானங்கள் மீது தனித்தனியாகவோ அல்லது கூட்டுமொத்தமாகவோ செல்வாக்குச் செலுத்தக்கூடுமென நியாயமாக எதிர்பார்க்கப்படுபவை பொருண்மையானவையாக கருத்திலெடுக்கப்படும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக, கணக்காய்வின் போது உயர்தொழில் தீர்ப்புக்களை நான் மேற்கொண்டு உயர்தொழில் ஐயப்பாட்டினையும் பேணுகின்றேன். அத்துடன்;

- மோசடி அல்லது தவறு காரணமாக நிதிக்கூற்றுக்களிற்கு ஏற்படக்கூடிய தவறான கூற்றுக்களின் பொருண்மையான ஆபத்துக்களை இனங்கண்டு மதிப்பீடு செய்தல், அந்த இடர்களை எதிர்கொள்ளக்கூடிய கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைத்துச் செயற்படுத்துதல் மற்றும் எனது அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்குப் போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை பெற்றுக்கொள்ளுதல். மோசடியானது தவறான கூட்டிணைவு, தவறான ஆவணம் தயாரித்தல், வேண்டுமென்று விட்டுவிடுதல்கள், தவறான வெளிப்படுத்தல்கள் அல்லது உள்ளகக் கட்டுப்பாட்டிலான எல்லை மீறல்களை உள்ளடக்குவதால் மோசடி மூலம் ஏற்படும் பொருண்மையான பிறழ் கூற்றொன்றைக் கண்டுபிடிக்காது விடுவதால் ஏற்படும் ஆபத்தானது தவறின் மூலமான விளைவொன்றைவிடக் கூடியதாகும்.

- சந்தர்ப்பங்களிற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைப்பதற்காக கணக்காய்வுடன் தொடர்புடைய உள்ளகக் கட்டுப்பாடுகள் தொடர்பான அறிவை பெற்றுக்கொள்வதற்காகவேயன்றி கூட்டுத்தாபனத்தின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் செயற்திறன் மீது அபிப்பிராயமொன்றை தெரிவிக்கும் நோக்கத்திற்காக அல்ல.

- பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தப்பாடுகளையும் கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மற்றும் முகாமைத்துவத்தால் மேற்கொள்ளப்பட்ட தொடர்புடைய வெளிப்படுத்தல்களினையும் மதிப்பீடு செய்தல்.

- பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளை அடிப்படையாகக் கொண்டு முகாமைத்துவத்தின் தொடர்ந்தியங்கும் கணக்கீட்டு எண்ணக்கரு பயன்பாட்டின் பொருத்தப்பாடுகள் தொடர்பிலும், தொடர்ந்தியங்கும் எண்ணக்கருவிற்கு அமைய

தொடர்ந்து செயற்படுவதற்கு கூட்டுத்தாபனத்திற்கு உள்ள ஆற்றல் தொடர்பில் குறிப்பிடத்தக்க ஐயப்பாட்டிற்கு காரணமாகவுள்ள நிகழ்வுகள் அல்லது நிலைமைகளுடன் தொடர்புடைய பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றதா என முடிவிற்குவருதல். பொருண்மையான நிச்சயமற்ற தன்மை காணப்படுகின்றது என நான் முடிவுக்குவந்தால், அல்லது எனது அபிப்பிராயத்தினை மாற்றியமைப்பதற்கு அவ்வாறான வெளிப்படுத்தல்கள் போதியளவாக காணப்படாதிருக்கையில், நிதிக்கூற்றுக்களிலுள்ள வெளிப்படுத்தல்களுடன் தொடர்புபட்டுள்ள எனது கணக்காய்வு அறிக்கையின் மீது கவனம் செலுத்துதல் வேண்டும். எனது கணக்காய்வு அறிக்கைத் திகதி வரையிலும் பெற்றுக்கொள்ளப்பட்ட கணக்காய்வுச் சான்றுகள் எனது முடிவுகளிற்கு அடிப்படையாகக் காணப்படுகின்றன. எவ்வாறாயினும், எதிர்கால நிகழ்வுகள் அல்லது நிலைமைகள் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் நிலையினை இடைநிறுத்துவதற்கு காரணங்களாக அமையலாம்.

- வெளிப்படுத்தல்கள் அடங்கலாக நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தல், கட்டமைப்பு மற்றும் உள்ளடக்கங்களை மதிப்பீடு செய்தல் மற்றும் நியாயமான சமர்ப்பித்தலினை நிறைவேற்றுவதற்கு அடிப்படையாகக் காணப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள் மற்றும் நிகழ்வுகளை நிதிக்கூற்றுக்கள் பிரதிநிதித்துவம் செய்கின்றனவா என்பதனை மதிப்பீடு செய்தல்.

தேவையானவாறு எந்த நேரத்திலும் பின்வரும் விடயங்களை பரீட்சிப்பதற்கு சாத்தியமானதாக கணக்காய்வின் நோக்கெல்லை விஸ்தரிக்கப்பட்டுள்ளது.

- கூட்டுத்தாபனத்தின் செயற்பாடுகளை தொடர்ச்சியாக மதிப்பீடு செய்யக்கூடியவாறான தகவல்களை சமர்ப்பிக்கும் நோக்கில் அமைப்பு, முறைமைகள், நடைமுறைகள், ஏடுகள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் முறையாகவும் போதுமானதாகவும் வடிவமைக்கப்பட்டிருந்தனவா என்பதுடன் அத்தகைய முறைமைகள், நடைமுறைகள், புத்தகங்கள், பதிவேடுகள் மற்றும் ஏனைய ஆவணங்கள் ஆக்கபூர்வமான செயற்பாட்டில் உள்ளனவா என்பதும்,

- கூட்டுத்தாபனத்தின் ஆளுகை சபையால் வழங்கப்பட்ட பொருத்தமான எழுத்துமூலமான சட்டம் அல்லது ஏனைய பொதுவான அல்லது விசேட பணிப்புரைகளுடன் கூட்டுத்தாபனம் இணங்கியிருந்ததா என்பதும்,

- கூட்டுத்தாபனம் அதன் அதிகாரங்கள், தொழிற்பாடுகள் மற்றும் கடமைகளின் பிரகாரம் செயற்பட்டிருந்ததா என்பதும், மற்றும்

- கூட்டுத்தாபனத்தின் வளங்கள் கால வரையறைகளினுள்ளேயும் பொருத்தமான சட்டங்களிற்கிணங்கவும் சிக்கனமாகவும் வினைத்திறனாகவும் ஆக்கபூர்வமாகவும் கொள்வனவு செய்யப்பட்டு பயன்படுத்தப்பட்டிருந்தனவா என்பதும் ஆகும்.

## 1.5 நிதிக்கூற்றுக்களின் தயாரிப்பு தொடர்பான கணக்காய்வு அவதானிப்புக்கள்

### 1.5.1 இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் இணங்காமை

| | குறித்த நியமம் தொடர்பாக இணங்காமை | முகாமைத்துவ கருத்துரைகள் | பரிந்துரைகள் |
|---|---|---|---|
| (அ) | 2019 ஆம் ஆண்டில் பெறப்பட்ட ரூபா 150 மில்லியன் மானியத்தில் 2021 ஆம் ஆண்டில் ரூபா 16,162,280 இற்கு ஆதனம் மற்றும் பொறி கொள்வனவு செய்யப்பட்டிருந்த போதிலும் 2019 | இந்த விடயத்தின் கீழ் குறிப்பிடப்பட்ட ரூபா 18,252,714.00 பெறுமதியான ஆதனம் மற்றும் பொறி தொடர்பாக இப் பெறுமதி 2019 ஆம் ஆண்டில் ரூபா 150 மில்லியன் அரசாங்க மானியமாக பெறப்பட்ட மூலதன | காலக்கழிவு சரியாக மேற்கொள்ளப்பட வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | ஆம் ஆண்டிலிருந்து அரசாங்க மானியத்தின் முழுத் தொகைக்கும் காலக்கழிவு மேற்கொள்ளப்பட்டிருந்தது. எனினும் 2021 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்யப்பட்ட சொத்துக்கள் தொடர்பாக அரசாங்க மானியம் காலக்கழிவிடப்பட்டிருந்ததன் காரணமாக மீளாய்வாண்டிற்கான ஏனைய வருமானம் ரூபா 3,232,456 ஆல் அதிகரித்துக் காட்டப்பட்டிருந்தது. | விடயங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது. குறித்த மானியத்தின் முழுத் தொகைக்கான காலக்கழிவு 2020 ஆம் ஆண்டில் தொடங்கப்பட்டதுடன் இது வருடாந்தம் காலக்கழிவிடப்படுகிறது. ஆகையால் 2021 ஆம் ஆண்டில் சொத்து கணக்கிற்கு மாற்றப்பட்ட குறித்த பெறுமதி 2021 ஆம் ஆண்டில் காலக்கழிவிடப்படக்கூடாது. | |
| (ஆ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 24 (LKAS 24) இன் 17 ஆம் பிரிவின் பிரகாரம் தொடர்புடைய தரப்பினர் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டிற்கான முக்கிய முகாமைத்துவ ஆளணியினரின் நட்டஈட்டின் தொடர்புடைய தகவல்கள் கூட்டுத்தாபனத்தின் நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | 24 ஆம் இலக்க நியமத்தின் பிரகாரம் நிதிக்கூற்றுக்களில் தொடர்புடைய தரப்பினர் தொடர்பான தகவல்களை வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன, மேலும் 2021 ஆம் ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களிலும் இத்தகைய வெளிப்பாடுத்தல்களை மேற்கொள்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன (நிதிக்கூற்றின் பக்க இல. 18-9 தலைப்பு). எனினும், நட்டஈடு தொடர்பான தகவல்களை தொடர்ந்துவரும் ஆண்டு முதல் இங்கு சுட்டிக்காட்டியவாறு வெளிப்படுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (இ) | இலங்கை கணக்கீட்டு நியமம் 16 இன் 79 பிரிவின் பிரகாரம் முழுமையாக பெறுமானத்தேய்விடப்பட்டிருந்த போதிலும் தற்போதும் பயன்பாட்டிலுள்ள ரூபா 3,301,748,267 கிரயமான ஆதனம், பொறி மற்றும் உபகரணங்களின் கொண்டுசெல்லும் பெறுமதி நிதிக்கூற்றுக்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | இங்கே குறிப்பிடப்பட்டுள்ள ரூபா 3,301,748,267.00 பெறுமதியான நிலையான சொத்துக்கள் தொடர்பான விபரங்கள் நிதிக்கூற்றுக்களில் குறிப்பு இல. 08 இன் கீழ் 26 மற்றும் 27 ஆம் இலக்க பக்கங்களில் காட்டப்பட்டுள்ளதுடன் விரிவான ஆவணங்கள் பட்டியல்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன. மேலும் இது நிதிக்கூற்றுக்களின் 08 ஆம் பக்கத்தின் குறிப்பு 3.3 இல் வெளிப்படுத்தப்பட்டது. | நியம ஏற்பாடுகளின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.2 கணக்கீட்டுக் குறைபாடுகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2013 ஆம் ஆண்டு முதல் 2019 ஆம் ஆண்டு வரையிலான காலத்திற்கு வழங்கப்பட்டிருந்த ரூபா 14,044,703 பெறுமதியான இரத்துச் செய்யப்பட்ட காசோலைகள் மீளாய்வாண்டின் போது நானாவித வருமானமாக கணக்குகளிற்கு எடுக்கப்பட்டிருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | வருமானம் சரியாக இனங்காணப்பட வேண்டும். |

### 1.5.3 நிறுவனத்தின் தொடர்ந்தியங்கும் எண்ணக்கரு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2017 ஆம் ஆண்டிற்காக கூட்டுத்தாபனத்தில் நட்டம் ஏற்பட்டிருந்த போதிலும் அரசாங்க மானியம் காரணமாக இது 2018 ஆம் ஆண்டில் இலாபமாக மாற்றப்பட்டிருந்தது. எனினும் கடந்த 5 ஆண்டுகளில் கூட்டுத்தாபனத்தில் தொடர்ச்சியான நட்டங்கள் ஏற்பட்டிருந்தன. 2017 ஆம் ஆண்டின் இறுதியில் உள்ளவாறான வங்கி மேலதிகப்பற்று ரூபா 316,510,538 ஆக இருந்ததுடன் 2020 ஆம் ஆண்டில் இது ரூபா 258,728,044 ஆக இருந்த அதே நேரம் மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு இது ரூபா 237,068,873 ஆக இருந்தது. இந்த தொடர்ச்சியான நட்டங்கள் சொத்துக்கள் மற்றும் மூலதனத்திற்கு பாதகமாக தாக்கமளித்திருந்தன. மேலும் அரசாங்கத்தின் நிதி உதவி இல்லாமல் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மை நிச்சயமற்றதாக இருந்தமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மைக்கு தாக்கமளித்திரந்த நட்டங்களைக் குறைப்பதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 1.5.4 கணக்காய்விற்கான ஆவணச் சான்றுகள் சமர்ப்பிக்கப்படாமை

| விடயம் | தொகை | சமர்ப்பிக்கப்படாத சான்று | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| - | - | (அ) மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான சேவை நாடும் கடன்பட்டோரின் மீதி ரூபா 377,270,977 ஆக இருந்ததுடன் அதில் ரூபா 175,329,456 தொகை அரசாங்க நிறுவனங்களாலும் ரூபா 201,941,521 தொகை தனியார் நிறுவனங்களாலும் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்டிருந்தன. மேலும் அரசாங்க நிறுவனங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ரூபா 88,959,971 தொகையான மற்றும் தனியார் நிறுவனங்களால் பிரதிநிதித்துவப்படுத்தப்பட்ட ரூபா 110,410,603 தொகையான கடன்பட்டோர் மீதிகளை ஏனைய கணக்காய்வு நடைமுறைகள் மூலமாகவேனும் உறுதிப்படுத்த முடியவில்லை. | கருத்துரை வழங்கப்பட வில்லை. | கடன்பட்டோரிடமிருந்து உறுதிப்படுத்தலை கோருவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.6 செலுத்த வேண்டிய மற்றும் பெற வேண்டிய கணக்குகள்

### 1.6.1 பெறவேண்டிய கணக்குகள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | மீளாய்வாண்டின் திசெம்பர் 31 இல் உள்ளவாறான சேவைநாடும் கடன்பட்டோர் மீதி ரூபா 377,267,803 ஆக இருந்ததுடன் அதில் 4 ஆண்டுகளை விஞ்சியிருந்த மீதி ரூபா 115,553,535 ஆக இருந்தது. எனினும் ரூபா 38,958,322 இற்கு மாத்திரமே சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன. மொத்த கடன்பட்டோர் மீதியில் ரூபா 152,166,097 தொகையானது ஒவ்வொன்றும் ரூபா 5 மில்லியனிற்கு மேற்பட்ட பெறுமதியுடன் கூடிய 08 அரசாங்க நிறுவனங்கள் உள்ளடங்கிய 15 கடன்பட்டோரை உள்ளடக்கியிருந்தது. இதில் உள்ளடங்கியுள்ள தேசிய சேமிப்பு வங்கியில் இருந்து பெறப்பட வேண்டிய ரூபா 10 மில்லியன் தொகையின் அறவீடு தொடர்பாக சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்த போதிலும் வங்கியுடன் கைச்சாத்திடப்பட்ட முறையான உடன்படிக்கையொன்று காணப்படாததன் காரணமாக அதன் அறவீடு நிச்சயமற்றதாக இருந்தது. | சட்ட நடவடிக்கைகளை எடுக்கப்படாமல் அரசாங்க நிறுவனங்களிடமிருந்து பெறப்பட வேண்டிய கடன்களை அறவீடு செய்வதற்கு அமைச்சின் செயலாளர் மூலம் நிறுவனங்களுடன் கலந்துரையாடிய பின்னர் தீர்வுகளை எடுப்பதற்கு சட்டமா அதிபர் திணைக்களத்திடமிருந்து அறிவுறுத்தல்கள் பெறப்பட்டன. அதன் பிரகாரம் தேசிய சேமிப்பு வங்கியிடமிருந்தான ரூபா 10 மில்லியன் அறவீடு தொடர்பான மேலதிக நடவடிக்கைகளிற்காக வெகுசன ஊடக அமைச்சிற்கு இந்த விடயத்தை அனுப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. பெறவேண்டிய அரசாங்க கடன்கள் தொடர்பாக வெகுசன ஊடக அமைச்சின் செயலாளர் தலைமையிலான ஒரு கூட்டம் 2019.09.09 இல் நடைபெற்றது, மேலும் குறித்த கூட்டத்தில் தேசிய சேமிப்பு வங்கியின் உயர் தரவரிசை உத்தியோகத்தர் ஒருவர் இந்த வேலை வங்கியின் எழுத்துமூல அங்கீகாரம் இல்லாமல் செய்யப்பட்டிருந்ததுடன் இதனால் கொடுப்பனவுகளை வங்கியால் மேற்கொள்ள முடியவில்லை என குறிப்பிட்டிருந்தார். | கடன்பட்டோர் மீதிகள் தாமதமின்றி அறவிடப்படுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) | 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு ரூபா 38,958,322 தொகையை அறவிடுவதற்கு கூட்டுத்தாபனத்தால் 16 சேவைநாடும் கடன்பட்டோரிற்கு எதிராக சட்ட வழக்குகள் தாக்கல் செய்யப்பட்டிருந்ததுடன் சட்டக் கட்டணங்களாக ரூபா 1,495,500 தொகை செலுத்தப்பட்டிருந்தது. வரன்முறைச் சட்டத்தின் (Limitation Act) பிரகாரம் 05 ஆண்டுகளிற்கு மேற்பட்டிருந்த ரூபா 100,130,139 கடன்பட்டோர் மீதியில் 6 ஆண்டுகளை விஞ்ச முன்னர் சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட | கருத்துரை வழங்கப்படவில்லை. | கடன்பட்டோர் மீதிகளை தாமதமின்றி அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

வேண்டிய போதிலும் ரூபா 12,075,596 தொகையை மாத்திரம் அறவிடுவதற்கு சட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டிருந்தன.

### 1.6.2 முற்பணங்கள்

| | கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|
| (அ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணம் 371(2)(ஆ) இன் பிரகாரம் ஒரு சந்தர்ப்பத்தில் பெறக்கூடிய செயல்நிமித்த கட்டுநிதிகளின் ஆகக்கூடிய எல்லை ரூபா 100,000 ஆக இருக்க வேண்டிய போதிலும் நிகழ்ச்சித்திட்டங்கள், தங்குமிடம், வழங்கல்கள் மற்றும் கொள்வனவுகள் போன்ற நடவடிக்கைகளுக்காக 12 சந்தர்ப்பங்களில் ரூபா 6,944,462 செயல்நிமித்த கட்டுநிதிகளாக வழங்கப்பட்டிருந்தன. | 2015/12/15 ஆம் திகதிய 806.07.02 ஆம் இலக்க சபை தீர்மானத்தின் பிரகாரம் நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பாளர்களுக்கான செயல்நிமித்த கட்டுநிதிகளின் எல்லையை விஞ்சி முற்பணங்களை செலுத்துவதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஏனெனில் நிகழ்ச்சித்திட்ட தயாரிப்பு செயன்முறையில் பெருமளவிலான பணத் தொகை செலவிடப்பட வேண்டும். மேலே குறிப்பிடப்பட்டுள்ள முற்பண எல்லைகளை விடுவிப்பதற்கான அங்கீகாரத்தை கோரி 2016.02.10 இல் பொது திறைசேரியின் செயலாளருக்கு கடிதமொன்று பரிந்துரைக்கப்பட்டது. மேலும் இது தொடர்பாக ஒரு நினைவூட்டலாக 2016.12.23 இல் பொது முயற்சிகள் திணைக்களத்திற்க ஒரு கடிதம் அனுப்பப்பட்ட போதிலும் அதற்கான பதில்கள் இன்னும் பெறப்படவில்லை. | இது சுற்றறிக்கை அறிவுறுத்தல்களுடன் இணங்குதல் வேண்டும். |
| (ஆ) | 2015 யூலை 14 ஆம் திகதிய 03/2015 ஆம் இலக்க பொது நிதி சுற்றறிக்கை மூலம் திருத்தப்பட்ட நிதிப்பிரமாணங்கள் 371(2)(ஆ) மற்றும் 371 (5) இன் பிரகாரம் பெறப்பட்ட செயல்நிமித்த கட்டுநிதி குறித்துரைக்கப்பட்ட நோக்கம் முடிவடைந்து 10 நாட்களுக்குள் தீர்க்கப்பட வேண்டும். எவ்வாறாயினும், மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு ஒரு வருடத்தை விஞ்சிய முற்பண மீதி ரூபா 16,117,304 ஆக காணப்பட்டது. | உயர் முகாமைத்துவத்தின் அங்கீகாரத்தின் அடிப்படையில் கூட்டுத்தாபனத்தின் நிகழ்ச்சித்திட்ட உற்பத்தி செயன்முறையின் தன்மை காரணமாக நடைமுறையில் எந்த முற்பணங்களையும் சரியான நேரத்தில் தீர்க்க முடியாத நிகழ்வுகளிற்கு மேலதிக காலப்பகுதி வழங்கப்படுகிறது. பெற்றுக்கொள்ளப்பட்ட முற்பணங்கள் தீர்க்கப்படாத நிகழ்வுகளில் சம்பளத்தை இடைநிறுத்துதல் மற்றும் முற்பணங்கள் சரியான | நிதிப்பிரமாணங்களின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

நேரத்தில் தீர்க்கப்படாத சந்தர்ப்பங்களில் தண்டப்பணத்தை அறவிடுதல் போன்ற ஒழுக்காற்று நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன.

## 1.7 சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் மற்றும் முகாமைத்துவ தீர்மானங்கள் பேன்றவற்றுடன் இணங்காமை

| | சட்டங்கள், விதிகள், பிரமாணங்கள் போன்றவற்றுடனான தொடர்பு | இணங்காமை | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|---|---|
| (அ) | பொது முயற்சிகள் சுற்றறிக்கைகள் 2015 மே 25 ஆம் திகதிய பிஈடி 01/2015 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 3.1 ஆம் பந்தி | நடுத்தர முகாமைத்துவம், கனிஷ்ட முகாமைத்துவம், முகாமைத்துவ உதவியாளர் மற்றும் ஒப்பந்த அடிப்படையில் போக்குவரத்து படிகள் மற்றும் எரிபொருள் படிகளுக்கு உரித்தில்லாத வகைப் பதவிகளிற்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட 90 உத்தியோகத்தர்களுக்கான போக்குவரத்து மற்றும் எரிபொருள் படிகளாக மீளாய்வாண்டின் போது ரூபா 7,008,171 தொகை செலுத்தப்பட்டிருந்தது. | கொடுப்பனவுகள் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்படுகின்றன. ஏனெனில் இது கூட்டுத்தாபனத்தின் தொடக்கத்திலிருந்து வழங்கப்பட்ட ஒரு சலுகையாகும், 1982 இன் 06 ஆம் இலக்க இலங்கை ரூபவாஹினி சட்டத்தின் 12.1 ஆம் பிரிவின் கீழ் வழங்கப்பட்ட அதிகாரங்களின் பிரகாரம் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தை பெற்ற பின்னர் குறித்த படியை செலுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |
| (ஆ) | 2003 யூன் 02 ஆம் திகதிய பிஈடி/12 ஆம் இலக்க சுற்றறிக்கையின் 6.5.1 ஆம் பந்தி | நிதிக்கூற்றுக்களுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டிய வரைவு ஆண்டறிக்கை 2022 யூலை 20 வரையிலும் கணக்காய்விற்கு சமர்ப்பிக்கப்பட்டிருக்கவில்லை. | 2022 ஆம் ஆண்டின் தொடக்கத்தில் தலைமை தாங்கிய கூட்டுத்தாபனத்தின் தலைவர் பதவி விலகியிருந்ததுடன் இதன் விளைவாக, 2021 ஆம் ஆண்டு தொடர்பான வரைவு ஆண்றிக்கைக்கான கூட்டுத்தாபனத்தின் தலைவரின் செய்தியைப் பெற்றுக்கொள்வதில் தாமதம் ஏற்பட்டது. ஆகையால் 2022.08.19 இல் | சுற்றறிக்கை அறிவுறுத்தல்கள் பின்பற்றப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | | நடாத்தப்படுவதற்காக பட்டியலிடப்பட்டுள்ள கூட்டத்தில் பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்திற்காக குறித்த அறிக்கையை சமர்ப்பித்த பின்னர் வரைவு ஆண்டறிக்கையை சமர்ப்பிக்க முடியும். |

## 1.8 நிதி முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறான நடைமுறைக் கணக்கு தொடர்பான மேலதிகப்பற்று ரூபா 237,068,873 ஆக இருந்ததுடன் மீளாய்வாண்டின் போது வட்டிகளாக ரூபா 22,480,822 தொகை கூட்டுத்தாபனத்தால் செலுத்தப்பட்டது. மேலும் அங்கீகரிக்கப்பட்ட மேலதிகப்பற்று எல்லை மீளாய்வாண்டின் 07 மாதங்களில் காலத்திற்கு காலம் மீறப்பட்டிருந்தன. | நாட்டின் பாதகமான பொருளாதார நிலைமை காரணமாக ரூபவாஹினி கூட்டுத்தாபனத்தின் முக்கிய வருமான மூலமான வான்கால வருமானம் குறைவாக இருந்தது, எனவே இங்கே குறிப்பிட்டுள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் மீண்டெழும் செலவினங்களை காலத்திற்கு காலம் அறவீடு செய்வதற்கு மேலதிகப்பற்று வசதிகள் பெறப்பட வேண்டியிருந்தது. | செலவினங்களை சரியாக முகாமை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 1.9 வரிப் பிரமாணங்களுடன் இணங்காமை

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2006 இன் 13 ஆம் இலக்க பொருளாதார சேவை கட்டணச் சட்டத்தின் 03 (1) பிரிவின் பிரகாரம் பொருளாதார சேவை கட்டணங்களின் மேலதிகக் கொடுப்பனவு தொடர்ந்துவரும் 2 ஆண்டுகளுக்குள் செலுத்தப்படும் வருமான வரியிலிருந்து ஈடுசெய்யப்படலாம். எனினும், ரூபா 22,225,059 பொருளாதார சேவை கட்டணங்கள் 2018 மற்றும் 2019 ஆண்டுகளில் மேலதிகமாக செலுத்தப்பட்டிருந்தன. இது வருமான வரி செலுத்தப்படாததால் எதிரீடு செய்யப்பட்டிருக்கவில்லை. முற்பணங்கள் மற்றும் வைப்புக்களின் கீழ் காட்டப்பட்டுள்ளது. மேலும், அதே காலாண்டில் மேற்கொள்ளப்பட்ட முற்செலுத்துகை முற்பணத்துடன் அட்டுறு பொருளாதார சேவை கட்டணங்கள் ஈடுசெய்யப்படக்கூடிய போதிலும் மீளாய்வாண்டிற்கு முன்னரிலிருந்து முன்கொண்டுவரப்பட்ட ரூபா 1,194,747 | 2022 ஆம் ஆண்டில் முற்பண கணக்கிலிருந்து குறித்த பெறுமதியை பதிவழிப்பதற்கும் தேவையான சீராக்கங்களைச் செய்வதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படும். மதிப்பிடப்பட்ட காலாண்டின் கடைசி மாதத்தில் உண்மையான பெறுமதியை கணிப்பீடு செய்த பின்னர் தேவையான திருத்தத்தை செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும். | நிதி நிலைமையை சரியாக காண்பிப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

தொகையான பொருளாதார சேவைக் கட்டணங்கள் மீளாய்வாண்டின் போது ஈடுசெய்யப்பட்டிருக்கவில்லை.

## 2. நிதி மீளாய்வு

### 2.1 நிதி விளைவுகள்

மீளாய்வாண்டிற்கான செயற்பாட்டு விளைவு ரூபா 227,342,397 பற்றாக்குறையொன்றாக இருந்ததுடன் அதற்கு நேரொத்த முன்னைய ஆண்டின் பற்றாக்குறை ரூபா 234,300,093 ஆக இருந்ததால் நிதி விளைவுகளில் ரூபா 6,957,696 தொகையான முன்னேற்றமொன்று அவதானிக்கப்பட்டது. விற்பனை வருமானம் ரூபா 95,256,030 ஆல் அதிகரித்தமை மற்றும் விற்பனை கிரயம், விநியோகக் கிரயம், நிர்வாக செலவினங்கள் மற்றும் நிதி செலவினங்கள் முறையே ரூபா 30,778,419, ரூபா 14,819,787, ரூபா 19,001,033 மற்றும் ரூபா 15,106,870 ஆல் குறைவடைந்தமை எள்பன இம் முன்னேற்றத்திற்கு பிரதானமாக தாக்கமளித்திருந்தன.

### 2.2 பிரதான வருமான செலவின விடயங்களின் போக்கு பகுப்பாய்வு

முறையற்ற முகாமைத்துவம் மற்றும் நிதி சிக்கல்கள் காரணமாக கூட்டுத்தாபனத்தில் நீண்டகாலமாக தொடர்ச்சியான நட்டங்கள் ஏற்படுகின்ற பின்னணியில் ஆண்டு செலவினங்கள், அலுவலக தேவைப்பாடுகள், மேடை மற்றும் வடிவமைப்பு, ஒலி முறைமைகளை பணிக்கமர்த்துதல் மற்றும் தங்குமிடம் என்பன முறையே ரூபா 3,007,498 அதாவது. 439 சதவீதம், ரூபா 3,114,578 அதாவது. 64 சதவீதம், ரூபா 930,224 அதாவது. 237 சதவீதம், ரூபா 2,123,500 அதாவது 264 சதவீதம் மற்றும் ரூபா 351,500 அதாவது 220 சதவீதத்தால் முன்னைய ஆண்டுடன் ஒப்பிடும்போது அதிகரித்திருந்தன.

### 2.3 விகிதப் பகுப்பாய்வு

(அ) மீளாய்வாண்டு மற்றும் முன்னைய ஆண்டிற்கான மொத்தலாப விகிதம் மற்றும் தேறியலாப விகிதம் என்பன எதிர்மறை பெறுமதியில் இருந்ததுடன் நடைமுறை விகிதம் குறைவடையும் போக்கில் காணப்பட்டமை அவதானிக்கப்பட்டது.

(ஆ) 2020 ஆம் ஆண்டில் எதிர்மறை 17.38 ஆகவிருந்த வட்டி மேவுகை விகிதம் மீளாய்வாண்டில் எதிர்மறை 14.72 ஆக காணப்பட்டது. தொடர்ச்சியான நட்டங்களின் பின்னணியில் வட்டி மற்றும் அந்நிய செலாவணியை (leverage) செலுத்துதல் கூட்டுத்தாபனத்தின் தொடர்ந்தியங்கும் தன்மையை பாதகமாக பாதித்திருந்தது.

## 3. செயற்பாட்டு மீளாய்வு

### 3.1 முகாமைத்துவ செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| (அ) எதிர் கொடுக்கல்வாங்கல் (contra deal) உடன்படிக்கைகளின் கீழ் உத்தியோகபூர்வ ஊடக ஒளிபரப்பாளராக 2020 ஆம் ஆண்டு ஒலிம்பிக் போட்டிகளின் ஊடகக் மேவுகையுடன் ஈடுபட்டிருந்த கூட்டுத்தாபனத்தின் 4 உத்தியோகத்தர்களிற்கு அனுசரணை மூலம் படிகள் செலுத்தப்பட்டிருந்தன. எனினும் | கூட்டுத்தாபனத்தால் வழங்கப்பட்ட ரூபா 714,560 இடைநேர் செலவின படியை அறவீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டது. ஒலிம்பிக் விழாவை ஒரு சர்வதேச போட்டியாகக் காண நாட்டின் பார்வையாளர்களுக்கு வாய்ப்பளிக்கும் வகையில் ஒவ்வொரு ஆண்டும் தேசிய | இலாபகரமான நிகழ்வுகளை முறையாக முகாமை செய்வதற்கு கூட்டுத்தாபனம் நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். |

| | | | |
|---|---|---|---|
| | குறித்த செலுத்தப்பட்ட ரூபா 714,560 இடைநேர் செலவின படிகளை அறவீடு செய்வதற்கு அங்கீகாரம் வழங்கப்பட்டிருந்த போதிலும் குறித்த தொகை மீளாய்வாண்டின் இறுதி வரையிலும் அறவிடப்பட்டிருக்கவில்லை. விழாவின் இலாபகரமான நிகழ்வுகளின் தவறான முகாமைத்துவம் காரணமாக ஒலிம்பிக் விளையாட்டு விழாவின் ஊடக மேவுகையிலிருந்து கூட்டுத்தாபனத்திற்கு ரூபா 77,946,276 நட்டம் ஏற்பட்டிருந்தது. | அலைவரிசையாக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. எனினும் வாடிக்கையாளர் நிறுவனங்கள் அனுசரணை செய்திருக்கவில்லை, இதன் விளைவாக போட்டிகளை ஒளிபரப்புவதில் இருந்து நட்டங்கள் ஏற்பட்டன. | |
| (ஆ) | அதிக பார்வையாளர்களை கவர்வதை சொந்தமாக்கி பதிப்புரிமை கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமாக காணப்பட்டு அனுமதியின்றி வெளிப்புற தரப்பினரால் கூட்டுத்தாபனத்தின் காட்சி நூலகத்திலிருந்து மாத்திரமே பெறப்படக்கூடிய காட்சி இறுவெட்டுகளின் பயன்பாடு தவிர்க்கப்பட வேண்டிய வெளிநாட்டு தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் குழந்தைகள் கார்ட்டுன்களைப் பாதுகாப்பதற்காக ஒரு முறையான பாதுகாப்பு முறைமை மற்றும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமை கூட்டுத்தாபனத்தால் நிறுவப்பட்டிருக்கவில்லை, | இந்த அறிக்கையில் குறிப்பிட்டுள்ளவாறு வெளிநாட்டு குழந்தைகளின் நாடகங்கள் மற்றும் குழந்தைகள் கார்ட்டுன்கள் கூட்டுத்தாபனத்திற்கு சொந்தமானவை அல்ல, மேலும் கூறப்பட்ட நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்ட முதல் கம்பனிக்கு சொந்தமானது. ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான ஒளிபரப்பு உரிமை மாத்திரமே நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெறப்பட்டது. எனவே தொடர்புடைய திட்டங்களுக்கான உரிமையை கோருவதற்கான உடன்படிக்கை காலம் முடிவடைந்த பின்னர் கூட்டுத்தாபனத்திற்கு எந்த உரிமையும் இல்லை. | முறையான பாதுகாப்பு முறைமை நிறுவப்பட வேண்டும். மேலும் வலுவான உள்ளக கட்டுப்பாட்டு முறைமை செயற்படுத்தப்பட வேண்டும். |

**3.2 இனங்காணப்பட்ட நட்டங்கள்**

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறு 126 உத்தியோகத்தர்களால் கூட்டுத்தாபனத்திற்கு மீளளிக்கப்படாத கேசட்டுகளின் (cassettes) எண்ணிக்கை 1128 ஆகவும், அந்த கேசட்டுகளின் பெறுமதி ரூபா 25,652,767 ஆகவும் காணப்பட்டது. | தயாரிப்பு பதவியணியினரின் உத்தியோகத்தர்களுக்கு வழங்கப்பட்ட சில கேசட்டுகள் உத்தியோகபூர்வ நோக்கங்களுக்காக அவர்களுடன் வைத்திருக்கிறது, மேலும் பெறப்பட்ட கேசட்டுகளை திருப்பித் தர இரண்டு வாரங்களுக்கு ஒரு | மீளளிக்கப்படாத கேசட்டுகளைப் பெற்றுக்கொள்வதற்கு உடனடி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | முறை நினைவூட்டல்களை அனுப்ப நூலகத்தால் நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. சம்பளத்திலிருந்து நீண்ட காலத்திற்கு திரும்பப் பெறப்படாத கேசட்டுகளின் பெறுமதியை அறவிடுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவிக்கும் கடிதங்களை அனுப்புவதற்கு மேலதிக நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன. | |

## 3.3 செயற்பாட்டு செயற்திறனின்மைகள்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| (அ) மீளாய்வாண்டின் போது ரூபா 67,389,000 இற்கு எட்டு உள்ளூர் தொலைக்காட்சி நாடகங்கள் கூட்டுத்தாபனத்தால் கொள்வனவு செய்யப்பட்டிருந்ததுடன் ரூபா 53,473,222 தொகை வான்கால வருமானமாக ஈட்டப்பட்டிருந்தது. எனினும் அந்த நாடகங்களின் ஒளிபரப்புக்கு ஏற்படும் மொத்த கிரயம் ரூபா 73,977,848 ஆகும். எனவே குறித்த உள்ளூர் தொலைக்காட்சி நாடகத்தை ஒளிபரப்பியதால் ஏற்பட்ட நட்டம் ரூபா 20,504,626 ஆகும். | தேசிய தொலைக்காட்சியில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நாடகங்களுடன் தொடர்புடைய வருமான நிலை குறைவாக உள்ளது, ஏனெனில் இந்த தொலைக்காட்சி நாடகங்கள் தனியார் அலைவரிசைகளில் ஒளிபரப்பப்பட்ட ஏனைய தொலைக்காட்சி நாடகங்களைப் போல அதிக எல்எம்ஆர்பிதரப்படுத்தலை பெற்றிருக்கவில்லை. | தொலைக்காட்சி நாடகங்களை ஒளிபரப்புவதில் ஏற்பட்ட நட்டங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |
| (ஆ) 18 உத்தியோகத்தர்களைக் கொண்ட சந்தைப்படுத்தல் பிரிவின் முக்கிய பணி வாடிக்கையாளர்களுக்கு வான்காலத்தை விற்பனை செய்வதாகும். எனினும் மீளாய்வாண்டில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நாடகங்களிலிருந்து ரூபா 104,180,629 நட்டம் ஏற்பட்டது, எனவே சந்தைப்படுத்தல் பிரிவில் ஆகக்குறைந்த செயலாற்றல் அவதானிக்கப்பட்டது. | பதின்மூன்று உத்தியோகத்தர்கள் சந்தைப்படுத்தல் பிரிவின் சந்தைப்படுத்தல் நடவடிக்கைகளுடன் நேரடியாக இணைகிறார்கள். தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பப்படும் தொலைக்காட்சி நாடகங்களும் ஏனைய நிகழ்ச்சிகளும் உயர் தரமானவையாக காணப்பட்ட போதிலும் வான் கால சந்தை பார்வையாளர்களின் எதிர்வினைகள் மற்றும் தேவையில் தங்கியுள்ளது. போட்டி சந்தை சூழ்நிலையில், தேசிய தொலைக்காட்சியில் ஒப்பீட்டளவில் ஒளிபரப்பப்பட்ட தொலைக்காட்சி நாடகங்கள் மற்றும் நிகழ்ச்சிகளுக்கு குறைந்த தேவை உள்ளது. | சந்தைப்படுத்தல் பிரிவில் அதிக செயலாற்றலை பேணுவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| | இதன் விளைவாக, அத்தகைய நிகழ்ச்சிகள் மூலம் இலாபம் ஈட்டுவது கடினமான பணியாகும். இருப்பினும், இத்தகைய போட்டி நடவடிக்கைகளின் சூழ்நிலையில் பல்வேறு சந்தைப்படுத்தல் உத்திகளைப் பயன்படுத்தி வருமானம் ஈட்டுவதற்கு சந்தைப்படுத்தல் பிரிவால் நடவடிக்கைகள் எடுக்கப்படுகின்றன. | |
| (இ) 1971 இன் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 7(1) ஆம் பந்தியின் பிரகாரம் 5 ஆண்டு காலத்தினுள் வருமானக் கணக்கின் தீவிர பற்றாக்குறையை தீர்ப்பனவு செய்வதற்கு அல்லது அந்தக் கணக்கின் தீவிர மிகை மூலம் நிதி அமைச்சரால் தீர்மானிக்கப்பட்ட ஏதேனும் காலப்பகுதியினுள் போதுமானதாக இருக்க வேண்டிய கூட்டுத்தாபனத்தின் நடவடிக்கைகளை பேணுவது கூட்டுத்தானத்தின் பணிப்பாளர் சபையின் பொறுப்பாகும். எனினும்,கூட்டுத்தாபனத்தின் அண்மைய ஐந்து ஆண்டுகளின் தேறிய நட்டம் ரூபா 1,345,535,662 ஆக காணப்பட்டதுடன் கூட்டுத்தாபனத்தின் செயற்பாட்டால் எதிர்பார்க்கப்படும் நிலை அடையப்பட்டிருக்காதமை அவதானிக்கப்பட்டது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நிதிச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரமும் நட்டங்களைத் தவிர்ப்பதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

### 3.4 பெறுகை முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| OB பஸ் மற்றும் 03 ஆம் இலக்க ஸ்டுடியோவிற்கான 03 pedestals மற்றும் 01 tripod ஆகியவற்றை கொள்வனவு செய்வதற்காக ரூபா 91,299,287 மொத்த பெறுமதிக்கான பெறுகை கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்பட்டது. எனினும் உரிய பொருட்களின் பொருத்தத்தை சோதித்த பின்னர் ஏற்றுக்கொள்ளுதல் சான்றிதழ் வழங்கப்பட வேண்டும். இது | OB பஸ்ஸிற்கான கேமரா சங்கிலியின் தொடர்புடைய பொருட்கள் பொறியியல் பிரிவு உத்தியோகத்தர்களால் சோதிக்கப்பட்டன, மேலும் ஏற்றுக்கொள்ளல் 2021.04.29 இல் வழங்கப்பட்டது. இது தொடர்பாக (மூலப்பிரதி) உடன்படிக்கை இல. 722 (M) இல் திகதி 2020.11.12 என குறிப்பிடப்பட்டுள்ளது. | பெறுகை வழிகாட்டலின் பிரகாரம் நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

கொடுப்பனவுகளை மேற்கொள்வதற்கு முன்னர் இப் பெறுகைக்காக வழங்கப்பட்டிருக்கவில்லை.

## 3.5 மனித வளங்கள் முகாமைத்துவம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டின் இறுதியில் உள்ளவாறு கூட்டுத்தாபனத்தின் நிரந்தர பதவியணி பதவிகளில் 219 வெற்றிடங்கள் இருந்தன. மேலும் 19 ஊழியர்கள் 07 பதவிகளுக்கு ஆட்சேர்ப்பு செய்யப்பட்டனர், அவை நிரந்தர, ஒப்பந்த மற்றும் ஒதுக்கீட்டு அடிப்படையில் அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரில் சேர்க்கப்பட்டிருக்கவில்லை. மேலும் 38 ஊழியர்கள் பதவியிணியினரின் அங்கீகரிக்கப்பட்ட எல்லையை மீறி நிரந்தர, ஒப்பந்த மற்றும் ஒதுக்கீட்டு அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியின் நேரத்தில் ஹோல்டருக்கு தனிப்பட்ட முறையில் அங்கீகரிக்கப்பட்ட 16 பதவிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இருபத்தி எட்டு நிரந்தர உத்தியோகத்தர்கள் அந்நேரத்தில் பணியிலீடுபடுத்தப்படுதப்படுகின்றனர். சந்தைப்படுத்தல் பிரிவின் மறுசீரமைப்பின் போது பணிப்பாளர் சபையின் அங்கீகாரத்தின் பேரில் 2000 ஆம் ஆண்டில் ஒப்பந்த அடிப்படையில் ஆட்சேர்ப்பு செய்யப்பட்ட பதினொரு சந்தைப்படுத்தல் நிறைவேற்றுநர்கள் சேவையில் உள்ளனர். பரிமாற்றக் கோபுரங்களின் பாதுகாப்பு நடவடிக்கைகளுக்கான ஒதுக்கீட்டு அடிப்படையில் ஈடுபடுத்தப்பட்ட இரண்டு நபர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டது. ஊழியர்களின் எண்ணிக்கை குறைவாக உள்ள அந்த நேரத்தில் 06 பதவிகளில் ஈடுபடுத்தப்பட்டிருந்த இருபது ஊழியர்கள் சேவையில் உள்ளனர்.<br><br>சேவையின் தேவைக்கேற்ப, ஒப்பந்த அடிப்படையில் 06 ஊழியர்களும், நிரந்தர பதவியணியினரின் சில பதவிகளுக்கு ஒதுக்கீட்டு அடிப்படையில் 12 ஊழியர்களும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். | அங்கீகரிக்கப்பட்ட பதவியணியினரின் வெற்றிடங்களை நிரப்புவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

## 4. கணக்களிப்பொறுப்பும் நல்லாளுகையும்

### 4.1 கூட்டிணைந்த திட்டம்

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
| --- | --- | --- |
| மீளாய்வாண்டிற்கான செயல்நடவடிக்கைத் திட்டத்தின் முன்னேற்ற அறிக்கையின் பிரகாரம் 2020 ஆம் ஆண்டு முதல் 2022 ஆம் ஆண்டு வரையிலான காலப்பகுதிக்கான கூட்டிணைந்த திட்டத்தின் ஒரு குறிக்கோளான பார்வையாளர்களை மேம்படுத்தும் | 2021 மற்றும் 2022 ஆண்டுகளில் நாட்டில் நிலவிய கொவிட் தொற்றுநோய் மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக கூட்டுத்தாபனத்தின் வருமான நிலை வேகமாக குறைவடைந்தது.<br>இதன் விளைவாக, கூட்டுத்தாபனத்தின் புதிய நிகழ்ச்சிகள் மற்றும் பழைய நிகழ்ச்சிகளின் தயாரிப்பு மற்றும் | செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |

| | | |
|---|---|---|
| பொருட்டு 10 நடவடிக்கைகள் அமுல்ப்படுத்தப்படுவதற்கு திட்டமிடப்பட்டிருந்த போதிலும். ஒரே ஒரு நடவடிக்கையில் முன்னேற்றம் காணப்பட்டதுடன் ஏனைய நடவடிக்கைகளில் எந்த முன்னேற்றத்தையும் அடைந்திருக்கவில்லை. | கொள்வனவு மிகக் குறைவாக காணப்பட்டதுடன் வான் கால இடைவெளியை நிரப்புவதற்கு தொலைக்காட்சி நாடகங்கள் மீண்டும் மீண்டும் ஒளிபரப்பப்பட்டன. செயல்நடவடிக்கைத் திட்டத்தின் படி திட்டமிடப்பட்ட பார்வையாளர்களின் எண்ணிக்கையை அதிகரிப்பதற்கு திட்டமிடப்பட்ட நடவடிக்கைகள் அதற்கேற்ப அமுல்ப்படுத்தப்பட்டிருக்கவில்லை. | |

### 4.2 பாதீட்டுக் கட்டப்பாடு

| கணக்காய்வு அவதானிப்பு | முகாமைத்துவ கருத்துரை | பரிந்துரை |
|---|---|---|
| 2021 சனவரி 01 இல் உள்ளவாறு திரண்ட நிதியின் எதிர்மறை மீதி ரூபா 347,178,946 ஆக காணப்பட்டதுடன் இது மீளாய்வாண்டின் இறுதியில் எதிர்மறை மீதி ரூபா 571,576,904 வரை அதிகரித்திருந்தது. 2021 திசெம்பர் 31 இல் உள்ளவாறான ரூபா 260,316,000 பாதிடப்பட்ட நிதியத்தின் எதிர்மறை மீதியுடன் ஒப்பிடும் போது குறித்த மீதிகளுக்கு இடையிலான வேறுபாடு ரூபா 311,260,904 ஆல் அதாவது எதிர்மறை 120 சதவீதத்தால் அதிகரித்திருந்தது. | கருத்துரை வழங்கப்படவில்லை. | நட்டங்களை தவிர்ப்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். |